# தமிழ்நாடு தட்டச்சு - கணினி பள்ளிகள் சங்கம்
# TAMILNADU TYPEWRITING - COMPUTER INSTITUTES' ASSOCIATION

(Regd.No. : 43/2016)

Regd. Office : # 555/18, Gandhi Road, (1st Floor), Kanchipuram - 631 501.
Communication Address : No. 48, Mahavishnu Salai, Gem Nagar, Kanchipuram - 631 502.
Web : www.tntcia.com

**L. SENTHIL,** B.C.A., D.C.P., T.T.C.,
State President,
ERODE.
CELL : 94430 82572

**J. BARATHAMANI,** T.T.C.,
State General Secretary,
KANCHIPURAM.
CELL : 90034 89826

**V. KALAIVANAN,** B.Com., M.A., PGDCA.,
State Treasurer,
COIMBATORE.
CELL : 90806 79673


31.08.2023.

பெறுநர்
திருமிகு. இயக்குனர் அவர்கள்,
தொழில்நுட்ப கல்வி இயக்ககம்,
கிண்டி, சென்னை–600 025.

அய்யா,

பொருள்: அரசு தொழில்நுட்பத் தட்டச்சுத் தேர்வுகள் ஆகஸ்ட் 2023 (26,27–08–2023) – தேர்வு மையம் தெரிவு செய்வதில் உள்ள குளறுபடிகள் – வினாத் தாள்களில் உள்ள அச்சுப்பிழைகள் – மற்றும் வினாத்தாளில் எழுத்துக்கள் சரியாக தெரியாமல் இருந்தது அணிமாற்றம் செய்தபிறகு தேர்வு அறை நுழைவுச்சீட்டு பெறுவதில் இருந்த சிக்கல்கள் – நிவாரணம் வேண்டுதல் குறித்து.

------

வணக்கம்.

நடந்துமுடிந்த தொழில்நுட்ப தட்டச்சுத் தேர்விற்கு (ஆகஸ்ட் 2023)–ல் தேர்வு மையம் தேர்ந்தெடுப்பதில் பயிலக உரிமையாளர்கள், அவர்கள் வழக்கமாக செல்லும் தேர்வு மையம் தேர்ந்தெடுக்க இயலாத நிலைமை ஏற்பட்டது என்பதனை தாங்களும் அறிவீர்கள். இனிவரும் காலங்களில் இதுபோன்று நிலைமை எங்கள் பயிலக உரிமையாளர்களுக்கு ஏற்படாது என நம்புகிறோம்.

கீழே குறிப்பிட்டுள்ள வினாத்தாள் குறியீட்டு எண்கள் கொண்ட வினாத்தாள்களில் ஏற்பட்டுள்ள அச்சுப்பிழை மற்றும் எழுத்துக்கள் சரிவர தெரியாமல் உள்ளது. அந்த வினாத்தாள்கள் இக்கடிதத்துடன் கோடிட்டு (1986, 1425, 1545, 1658) இணைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட வினாத்தாள்கள் சரியாக அச்சிடப்படாததும், எழுத்துப் பிழைகள் அதிகமாக இருப்பதும், மொத்தத்தில் இதுபோன்ற பிழைகள் மாநிலம் முழுவதும் இருப்பதாக தெரியவருகிறது. ஆகவே இளநிலை தேர்வு இரண்டாம் தாள் வினாக்களின் விடைத்தாள்களுக்கு நிவாரணம் அளித்து மாணவர்களின் தேர்ச்சியை உறுதிப்படுத்திட வேண்டுகிறோம்.

# தமிழ்நாடு தட்டச்சு - கணினி பள்ளிகள் சங்கம்
# TAMILNADU TYPEWRITING - COMPUTER INSTITUTES' ASSOCIATION

(Regd.No. : 43/2016)

Regd. Office : # 555/18, Gandhi Road, (1st Floor), Kanchipuram - 631 501.
Communication Address : No. 48, Mahavishnu Salai, Gem Nagar, Kanchipuram - 631 502.
Web : www.tntcia.com

| L. SENTHIL, B.C.A., D.C.P., T.T.C., | J. BARATHAMANI, T.T.C., | V. KALAIVANAN, B.Com., M.A., PGDCA., |
|---|---|---|
| State President, | State General Secretary, | State Treasurer, |
| ERODE. | KANCHIPURAM. | COIMBATORE. |
| CELL : 94430 82572 | CELL : 90034 89826 | CELL : 90806 79673 |




ஆங்கிலம் இளநிலை 1411 குறியீட்டு எண் கொண்ட வினாத்தாள் புதுமுக இளநிலை அளவிலேயே இருந்தது. இதனால் மாணவர்கள் குழப்பம் அடைந்துள்ளனர்.

இம்முறை காவல் உதவி ஆய்வாளர் தேர்வின் காரணமாக அணி மாற்றம் செய்த பிறகு தேர்வு அறை நுழைவுச்சீட்டு 26–08–2023 மாலை பதிவிறக்கம் செய்ய முடியவில்லை. மீண்டும் 27–08–2023 காலை 8.00மணி வரை பதிவிறக்கம் செய்ய முடியவில்லை. அதன்பிறகே பதிவிறக்கம் செய்ய முடிந்தது. இதனால் அணி மாற்றம் வேண்டிய மாணவர்கள் தேர்வு எழுதுவதில் சிறிது சிரமம் ஏற்பட்டு, பின்னர் சரிசெய்யப்பட்டு மாணவர்கள் தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டனர். இதனால் மாணவர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகினர்.

பொதுவாக இளநிலை தேர்வு எழுதுபவர்களுக்கு குறைந்தபட்ச கல்வித் தகுதி 8–ஆம் வகுப்பு தேர்ச்சி என்றும் முதுநிலை தேர்விற்கு இளநிலைத் தேர்வு தேர்ச்சிபெற்றவர்கள் முதுநிலை தேர்வு எழுதலாம் என்றிருக்கும்போது, இரண்டாம்தாள் வினாவினை மாணவர்கள் படித்து புரிந்துகொண்டு தேர்வு எழுதும் மனநிலையில் உளவியல் ரீதியாக (சரிவர கையெழுத்து பிரதி இல்லாத காரணத்தினால்) பாதிக்கப்படுவார்கள் என்பதனை கருத்தில்கொண்டு மாணவர்களின் நலன் கருதி நிவாரணம் வழங்கிடுமாறு வேண்டுகிறோம்.

தங்கள் உண்மையுள்ள,

J. [signature]

**(ஜெ. பரதமணி)**
மாநில செயலாளர்,
தமிழ்நாடு தட்டச்சு–கணினி பள்ளிகள் சங்கம்,
காஞ்சிபுரம்.

நகல்:

1. உயர்திரு. கூடுதல் இயக்குநர் (தேர்வுகள்) அவர்கள்,
   தொழில்நுட்ப கல்வி இயக்ககம். சென்னை–600 025.
2. உயர்திரு. வட்டார அலுவலர் II அவர்கள்,
   தொழில்நுட்ப கல்வி இயக்ககம், சென்னை–600 025.